**வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் - 2020, 2021, 2022 மற்றும் 2023**

---

வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் 2020, 2021, 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற தொழிற்சாலையின் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலவுகை**

தொழிற்சாலையால் இறுதியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| **உருப்படி** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 74,440,592 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 88,511,879 |
| **மொத்த சொத்துக்கள்** | **162,952,471** |

| | |
|---|---|
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறை பொறுப்புக்கள் | 145,250,281 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 20,881,436 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **166,131,717** |
| உரித்துகள் | (3,179,245) |
| மொத்த பொறுப்புகள் மற்றும் உரித்துகள் | 162,952,472 |
| மொத்த வருமானம் | 11,120,968 |
| மொத்த செலவினம் | 19,767,822 |
| **நட்டம்** | **(8,646,854)** |

**2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான 4 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 1994 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் ஒட்டுமொத்த தொகை வரிசை அமைச்சினால் வழங்கப்படுவதுடன், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பதிவுகள் காசுப் புத்தகங்களில் பேணிச் செல்லப்படுகின்றது. தொழிற்சாலைக்குரிய 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு துரிதமாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளதுடன், அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டவுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.2 தொடர்ந்தியங்கும் நிலை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1957 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் வருடாந்தம் 16,320 மெற்றிக் தொன் சீனி, 9,000 மெற்றிக் தொன் மொலேசஸ் மற்றும் வடிகட்டிய எரி திரவம் 3.9 மில்லியன் லீட்டர் உற்பத்தி இயலளவினை கொண்டிருந்தது. தொழிற்சாலையின் நிர்வாகத்தின் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிலவிய உச்ச செயற்திறனின்மை மற்றும் முறைகேடுகள் தொடர்பிலான விடயங்களின் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டின் போது 1,133 எண்ணிக்கையான அனைத்து ஊழியர்களுக்கும் பணிக்கொடை கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டு சேவை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அது முதல் எதுவித உற்பத்தி நடவடிக்கையும் இல்லாது தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 3,179,245 தொகையான தேறிய சொத்துக்களின் மறைப் பெறுமதியொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது தொழிற்சாலையின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு இரு தனியார் கம்பனிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கை நிறைவடையும் திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தமையால் இந்த நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. | இந்த நிறுவனங்களை மீள்கட்டமைக்கும் பணிகள் நிதி அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுவது நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் என்பதால் அந்த நிறுவனத்திடம் வினவுதல் பொருத்தமானது ஆகும். | தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் துரிதமாக முகாமை செய்யப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிச் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு 1957 ஆம் ஆண்டின் போது 11212 ஆம் இலக்கமுடைய வர்த்தமானியின் மூலம் 21233 ஏக்கர்கள் 2 ரூட்கள், 30 பேர்ச் (8,596 ஹெக்டேயர்கள்) பரப்பளவான காணி விவசாய மற்றும் காணிகள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 4 வலய காணிகளுக்காக 4,887 ஹெக்டேயர்களும், பண்ணை, சீனித் தொழிற்சாலை மற்றும் வீடமைப்பு தொகுதி, இளைஞர் படையணி, அகதிகள், காடு, கால்வாய்கள் மற்றும் வீதிகள் மற்றும் இராணுவ முகாம்களுக்கும், எஞ்சிய 3,709 ஹெக்டேயர்கள் ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்த நிலப்பரப்பில் சுமார் 500 எக்கர்கள் படியாக தனியார் நிறுவனமொன்றுக்கு மற்றும் அரச நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகள் காணி ஆணையாளர் நாயகத்தினால் கையாளப்பட்டு வருகின்றது, இது தொடர்பில் காணிகள் ஆணையாளர் திணைக்களத்துடன் கலந்தாலோசிப்பது பொருத்தமானதாக இருக்கும். | தமது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை வரிசை அமைச்சினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையில் எதுவித செயற்பாட்டு நடவடிக்கைகளும் இடம்பெறாததுடன், சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் ஏனைய பணிகளுக்காக மாத்திரம் பொது முகாமையாளர் உள்ளடங்களாக முன்னர் நட்டஈடு வழங்கப்பட்ட விலகிச் | 1994 மார்ச் 31, முதல் எந்த செயல்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் 230 ஊழியர்கள் ஏற்கனவே உள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் நிர்வாக நோக்கங்களுக்காகவும் தக்கவைக்கப்பட்டுள்ளனர். | அரச வளங்களை திறமையாகவும், செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு பொறுப்பான தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சென்ற 33 உழியர்கள், அதாவது 3 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 15 மேற்பார்வையாளர்கள், 4 சாரதிகள், 3 களஞ்சிய பொறுப்பாளர்கள், 6 எழுதுவினைஞர்கள் மற்றும் 2 தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்போது சேவையாற்றியவாறு உள்ளதுடன், 2020, 2021, 2022 மற்றம் 2023 ஆம் ஆண்டுகளில் சம்பளம் மற்றும் படிகள், மேலதிக நேர படிகள் ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு முறையே ரூபா 14,822,246, ரூபா 15,000,761, ரூபா 16,838,619 மற்றும் ரூபா 16,569,952 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதில் சில ஊழியர்கள் இறந்துவிட்டனர் மற்றும் சில ஊழியர்கள் பதவி விலகிச் சென்றுள்ளனர். தற்போது, 33 ஊழியர்கள் எஞ்சியுள்ளனர். மீதமுள்ள ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பொது திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.